# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016

1276

| தரம் : 06 | சைவநெறி<br>பெயர் / சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. தனக்கு மேல் தலைவன் இல்லாதவர்
    1) கணபதி 2) விக்னேஸ்வரர்
    3) விநாயகர் 4) பிள்ளையார்

02. நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் கதையுடன் தொர்புடையவர்
    1) கஜமுகாசுரன் 2) அகத்தியர்
    3) நரகாசுரன் 4) சிங்கமுகன்

03. ஒரு மனிதனுக்கு உயர்வைத் தருவது
    1) பணம் 2) புகழ்
    3) உண்மை 4) உயர்பதவி

04. "அட்சர அப்பியாச ஆரம்பம் " என அழைக்கப்படும் சடங்கு
    1) பெயர் சூட்டுதல் 2) ஏடு தொடக்கல்
    3) காதுகுத்துதல் 4) சோறூட்டல்

05. பஞ்ச புராணம் ஓதும்போது மூன்றாவதாக ஓதப்படுவது
    1) திருவிசைப்பா 2) திருவாசகம்
    3) தேவாரம் 4) திருப்பல்லாண்டு

06. நரகாசுரனுடன் தொடர்புடையது
    1) மானம்பூ 2) தீபாவளி
    3) சூரன்போர் 4) ஆடிப்பிறப்பு

07. தேவாரத் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட தலம்
    1) காசி 2) திருவாரூர்
    3) திருவண்ணாமலை 4) தில்லை

08. சிவனடியார்களுக்கு திருவமுது படைக்கும் தொண்டு புரிந்தவர்
    1) கண்ணப்ப நாயனார் 2) திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
    3) இளையான் குடிமாற நாயனர் 4) குங்குலியக்கலய நாயனார்

09. "அறம் செய விரும்பு" எனக்கூறும் நூல்
    1) நல்வழி 2) கொன்றை வேந்தன்
    3) திருக்குறள் 4) ஆத்தி சூடி



kalvi.lk

10. விஷ்ணுவுக்குரிய விரதம்
1) பிரதோஷம் 2) ஏகாதசி
3) திருக்கார்த்திகை 4) சிவராத்திரி

11. "தருமசேனர்" என்னும் பெயருடன் சமண சமயக் குருவாகத் திகழ்ந்தவர்
1) திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் 2) திருநாவுக்கரசு நாயனார்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்கவாசக சுவாமிகள்

12. "முனிவர்" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்
1) திருமூலர் 2) ஞானப்பிரகாசர்
3) சுவாமி விவேகானந்தர் 4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

13. "தூலலிங்கம்" எனப்படுவது.
1) கோபுரம் 2) சிவலிங்கம்
3) பலிபீடம் 4) தூபி

14. "கோயில்" என்று சிறப்பாக அழைக்கப்படும் தலம்.
1) நல்லூர் 2) திருவண்ணாமலை
3) திருக்கேதீச்சரம் 4) தில்லை

15. பாண்டிய மன்னனுடைய அரச சபையில் முதலமைச்சராகப் பணி புரிந்தவர்
1) திருஞான சம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்கவாசக சுவாமிகள்

16. இறைவனைப் "பல்லாண்டு வாழ்க" என்று வாழ்த்திப் பாடியவர்
1) சேக்கிழர் 2) கருவூர்தேவர்
3) சேந்தனார் 4) திருமூலர்

17. ஆலயதரிசன பலனைத் தருபவர்
1) சோமஸ்கந்தர் 2) சண்டேஸ்வரர்
3) சுப்பிரமணியர் 4) மூலமூர்த்தி

18. சிவசின்னங்கள் எனப்படுபவை
1) மாலை, விபூதி 2) உருத்திராக்கம், வீபூதி
3) தோடு, விபூதி 4) மாலை, உருத்திராக்கம்

19 பசுவதைக்கு அஞ்சி நாட்டை விட்டு தமிழகம் சென்றவர்
1) ஞானப்பிரகாச சுவாமிகள் 2) விபுலானந்தர்
3) விவேகானந்தர் 4) ஸ்ரீ இராம கிருஷ்ணர்

20. ஆலய வழிபாட்டினால் நாம் பெறும் பயன்
1) உறவினர்களைச் சந்தித்தல் 2) பொழுது போக்கு
3) வாழ்வு வளம் பெறும் 4) நண்பர்களைச் சந்தித்தல்

(20x 2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

01. 1) பின்வரும் திருமுறைப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி அவற்றைப் பாடியவர் பெயர்களையும் எழுதுக.

I. "பித்தாபிறை சூடி............." II. "பூசுவதும் வெண்ணீறு..............."

III. "ஒளிவளர் விளக்கே................" IV. "சீரும் திருவும் பொலிய.................."

( 8+2x2 =20 புள்ளிகள்)

02. **"திருமுறைகளை ஓதிப் பயன் பெறுவோம்"**

1) பஞ்சபுராணம் ஓதும் ஒழுங்கு முறையை எழுதுக.

2) பஞ்சபுராணம் ஓதும் போது கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் குறிப்பிடுக.

3) திருவாசகம் எத்தனையாம் திருமுறையில் உள்ளது எனக்குறிப்பிட்டு பாடியவர் பெயரையும் எழுதுக.

4) அறுபத்துமூன்று அடியார்களின் வரலாற்றைக் கூறும் நூலினைக் குறிப்பிட்டு, அதனைப் பாடியவர் பெயரையும் எழுதுக.

(3+3+2+2 =10 புள்ளிகள்)

03. **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**

1) ஆலயம் என்பதன் பொருளை எழுதுக.

2) ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் 5 எழுதுக.

3) ஆலயத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய பூசைப்பொருட்கள் 5 எழுதுக.

4) ஆலய வழிபாட்டினால் கிடைக்கும் நன்மைகளைக் குறிப்பிடுக.

(2+2+3+3 = 10 புள்ளிகள்)

04. **"பண்டிகைகளைக் கொண்டாடி சைவப் பாரம்பரியங்களைப் பேணுவோம்"**

1) பண்டிகை என்பதன் கருத்தை எழுதுக.

2) பண்டிகைகள் மூன்றின் பெயரை எழுதுக.

3) பண்டிகைகளின் போது நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகளை எழுதுக.

4) பண்டிகைகள் மூலம் வளர்த்துக் கொள்ளப்படும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.

(2+2+3+3 = 10 புள்ளிகள்)



kalvi.lk

05. **“விழுமியங்களைப் பேண் வாழ்வில் உயர்வோம்”**

*1) விழுமியப் பண்புகள் என்பதன் கருத்தை எழுதுக.*

*2) நீர் வாழ்வில் கடைப்பிடிக்கும் விழுமியப் பண்புகளுள் நான்கினைக் குறிப்பிடுக.*

*3) பெரியோர் எனப்படுவோர் யாவர் என எழுதுக.*

*4) பெரியோர் முன் செய்யத்தகாத செயல்கள் ஐந்து எழுதுக.*

*(2+3+2+3 = 10 புள்ளிகள்)*

06. **பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| நாயனார் பெயர் | பிறந்த ஊர் | மறு பெயர் | முத்தியடைந்த தினம் |
|---|---|---|---|
| திருஞானசம்பந்தர் | | | வைகாசிமூலம் |
| திருநாவுக்கரசர் | திருவாமூர் | | |
| சுந்தரமூர்த்தி நாயனார் | | | |
| மாணிக்கவாசகர் | | | |

*(10 x 1 = 10 புள்ளிகள்)*

07. **பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

*1) சைவ இல்லம்*

*2) பெயர் சூட்டல் சடங்கு*

*3) தீபாவளிப் பண்டிகை*

*4) இளையான் குடி மாற நாயனார்*

*5) சைவ விரதங்கள்*

*(5+5 = 10 புள்ளிகள்)*

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page